

கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட, மாநகர தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், மாவட்டப் பொருளாளரும் புதுக்கோட்டை துணை மேயருமான எம்.லியாகத் அலி வரவேற்பிலும் திலகர் திடலில் நடைபெற்றது. இதில் கழக கொள்கை பரப்புச் செயலாளரும், மாநிலங்களவை குழுத் தலைவருமான திருச்சி என்.சிவா எம்.பி. சிறப்புரையாற்றினார். நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன், சுப.சரவணன், கே.ஆர்.என்.போஸ், செ.அசோக்பாண்டியன், சு.சண்முகம், அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, தவ.பாஞ்சாலன், என்.சாத்தையா, ராப்பூசல் எம்.செந்தில்குமார், சி.ஆர்.வி.சித்ரா, கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், ஓ.எஸ்.வெங்கடாசலம், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, மு.பி.ம.சத்தியசீலன், அ.இளங்குமரன், சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், அ.ரெத்தினம், எம்.எம்.பாலு, ப.ரெங்கராஜன், எம்.மணிவேலன், பழனிவேலு, சேட் (எ) ஷாஜகான், ஏ.ராமலிங்கம், ஆ.ஜேம்ஸ், மு.ராஜதுரை, மு.க.அறிவுடைநம்பி, டாக்டர் சி.குறிஞ்சிவாணன், கே.எஸ்.ச.இளையச்சூரியன், மாலா ராஜேந்திர துரை, சொ.தமிழினியன், செ.கணேஷ், டி.அப்புக்காளை, வடவாளம் க.செ.மணிமாறன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## திருவாரூர் மாவட்டம் வருகை தந்த

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.பங்கேற்பு

*திருவாரூர், மார்ச் 7 -*

துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்க, இரண்டு நாள் பயணமாக திருவாரூர் மாவட்டம் வந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, மாவட்ட எல்லையான கோவில்வெண்ணியில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டக் கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து வரவேற்பளித்தனர்.

இந்த வரவேற்பு நிகழ்வில் தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அவைத்தலைவர் க.தன்ராஜ், கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கம் ஜி.பாலு, முன்னாள் துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா, மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்.எஸ்.காத்திக், எம்.ராமகிருஷ்ணன், மு.வெங்கடேசன், சாந்தி பாஸ்கர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாண்டியன், ப. ஆடலரசன், ஞானசேகரன், நகர்மன்றத் தலைவர்கள் மன்னை த.சோழராஜன், கவிதா பாண்டியன், பாத்திமா பஷீரா, மும்தாஜ் நவாஸ் கான், விஜயலெட்சுமி முருகேசன், முன்னாள் ஒன்றியக் குழு தலைவர் சோம. செந்தமிழ்சசெல்வன்.

ஒன்றியச் செயலாளர்கள் வீ.அன்பரசன், தெட்சிணாமூர்த்தி, ஆர்.பாலச்சந்திரன், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால. ஞானவேல், டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், ஜோதிராமன், ப.பிரபாகரன், கேப்டன் செல்வராஜ், இரா. மனோகரன், புலிவலம் .ஏ.தேவா, ப.பிரகாஷ், இரா. மனோகரன், ஐ.வி.குமரேசன் நகர செயலாளர்கள் வீரா. கணேசன், வாரை. எஸ்.பிரகாஷ், ஆர்.ராஜசேகரன், எஸ். வி.பக்கிரிசாமி, பா.சிவநேசன், ஏ.கே.டி.சேரன், நன்னிலம் பக்கிரிசாமி, சிவ.தியாகு, பூண்டி கே.கலைவேந்தன்.

மன்னார்குடி ராஜகோபாலசுவாமிகள் அறங்காவல் குழு தலைவர் இளவரசன், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.செந்தில், கே.எஸ்.எஸ். தியாகபாரி, ஆர்.முருகேசன் கணபதி, செல்வ.ஜெயதேவன் ,கலைவாணி மோகன் , கணபதி, காஞ்சித்துரை, கமாலுதீன் , மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பனங்குடி ஏ.எஸ். குமார்,பகலவன், வி.ஆர். என்.பன்னீர், எம்.என்.ராஜா, ஷோபா கணேசன், மீனாட்சி சூர்யபிரகாஷ், சதீஷ், தாஜுதீன், ராஜ் (எ) கருணாநிதி, எண்கண்.மணி, குன்னலூர் அன்பழகன், பா.அரவிந்த், தேசபந்து, வழக்கறிஞர் விநாயக மூர்த்தி, ஆர்.வி. ஆனந்த், ஆர்.பிரபாகரன், கரிகாலன், டாக்டர் திவாகரன்.

மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணை செயலாளர் இரா.சங்கர், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ஆர்.வி.எல்.ரவி, மாவட்ட மகளிர் அணி தலைவர் ராணிசேகர் மற்றும் முன்னாள் இந்நாள் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், கழக தோழர்களுடன் பெருந்திரளான பொதுமக்களும், ஏராளமான பெண்களும், மாணவ, மாணவிகளும், இளைஞர்களும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களும் பங்கேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வரவேற்று மகிழ்ந்தனர்.


## திருவண்ணாமலை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# கழகத் தலைவர் - திராவிட மாடல் நாயகரின் 72வது பிறந்த நாள் விழா தொடர் பொதுக் கூட்டங்கள்!

| நாள் | நகர/ ஒன்றிய/ பேரூர் | தலைமைக் கழக பேச்சாளர்கள் |
|---|---|---|
| 6/03/25 | அனுக்காவூர் கிழக்கு, மேற்கு | நெல்லிகுப்பம் புகழேந்தி, கவிஞர் நன்மாறன் |
| 7/03/25 | பெரணமல்லூர் கிழக்கு | குடியாத்தம் , பெரிய கோட்டிஸ்வரன், வேலூர் கென்னடி |
| 9/03/25 | களம்பூர் பேரூர் | பவானி கண்ணன்,ஆலந்தூர் மலர்மன்னன் |
| 10/03/25 | சேத்துப்பட்டு மேற்கு | பொன்னேரி சிவா, (குடந்தை ரமேஷ்) |
| 11/03/25 | வந்தவாசி கிழக்கு, மத்தியம் | புதுகோட்டை விஜயா, (விசார் தமிழரசன்) |
| 12/03/25 | மேற்கு ஆரணி தெற்கு | வி.பி.ராஜன், ஆசூர் மணிவண்ணன் |
| 13/03/25 | போளூர் தெற்கு | கடலூர் புகழேந்தி, மயிலாடுதுறை அருள்தாஸ் |
| 17/03/25 | பெரணமல்லூர் மேற்கு | ஈரோடு இறைவன், ஆவடி பாஸ்கர் |
| 17/03/25 | கண்ணமங்கலம் பேரூர் | சேலம் சுஜாதா, சேலம் கோவிந்தன் |
| 18/03/25 | தெள்ளார் மேற்கு, மத்திய | கம்பம் செல்வேந்திரன், குமரி பிரபாகரன் |
| 19/03/25 | ஆரணி வடக்கு தெற்கு | அத்திபட்டு சம்ராஜ், தக்கோலம் தேவபாலன், தமிழ்கொண்டான் |
| 20/03/25 | போளூர் மத்தியம் | கரூர் முரளி, போடி காமராஜ் |
| 21/03/25 | தெள்ளார் கிழக்கு | கவிச்சுடர் கவிதைபித்தன், குடந்தை பாஸ்கர் |
| 22/03/25 | வெம்பாக்கம் மத்தியம், மேற்கு | ஆடுதுறை உத்திராபதி, ஸ்ரீராம் |
| 23/03/25 | ஆரணி நகரம் | கல்பாக்கம் ரேவதி, இன்னிசை பட்டிமன்றம் |
| 24/03/25 | செய்யாறு மேற்கு | சு ப.வீரபாண்டியன் |
| 25/03/25 | சேத்துப்பட்டு பேரூர் | கோவி, செழியன், முரசொலி மூர்த்தி |
| 27/03/25 | வெம்பாக்கம் கிழக்கு | சிவாஜி கிருஷ்ண மூர்த்தி, கந்திலி கரிகாலன் |
| 31/03/25 | பெரணமல்லூர் பேரூர், தேசூர் பேரூர் | தூத்துகுடி சரத்பாலா, பேரணாம்பட்டு , ராஜேந்திர பிரசாத் |
| 02/04/25 | போளூர் பேரூர் | திண்டுக்கல் ஐ.லியோனி, வண்ணை புகாரி |
| 03/04/25 | மேற்கு ஆரணி வடக்கு | தமிழன் பிரசன்னா, எழும்பூர் கோபி |
| 04/04/25 | செய்யாறு கிழக்கு | ராஜீவ் காந்தி, சேப்பாக்கம் பிரபாகரன் |
| 06/04/25 | வந்தவாசி மேற்கு | சைதை சாதிக், மீனாகண் ரமேஷ் |
| 07/04/25 | சேத்துப்பட்டு கிழக்கு | சூரியா வெற்றிக் கொண்டான், ஆம்பூர்தர்மன் |

**திருவண்ணாமலை வடக்கு மாவட்ட தி.மு.க.**


# தடைகளைத் தாண்டி சாதிக்கும் திராவிட மாடல் அரசு!

சமூக நீதியை சிதைக்கத்தான் புதிய கல்விக் கொள்கை கொண்டு வரப்பட்டுள்ளது என்பதுதான் முதல்வர் குற்றச்சாட்டு. இதன் மூலம் தமிழர்கள் முன்னேற்றம் தடுக்கப்படும் என்று பிரதமருக்கு ஆண்டுதோறும் வழங்க வேண்டிய 2,152 கோடி நிதியை விடுவிக்க வேண்டும் என கடிதம் எழுதினார் முதல்வர். இதற்குக் கல்வி அமைச்சர் பதில் கடிதத்தில் கல்வியில் அரசியல் செய்ய வேண்டாம் என்று எங்களுக்கு அறிவுரை வழங்குகிறார். அரசியல் செய்யாதீர்கள் என்பது தான் முதல்வரின் கோரிக்கையும் அதே பதிலை திருப்பி எங்களுக்கு சொல்லி ஏமாற்ற பார்க்கிறார் கல்வி அமைச்சர். புதிய கல்விக் கொள்கையை செயல்படுத்தாவிட்டால் நிதி தர முடியாது என்கிறார் ஒன்றிய கல்வி அமைச்சர். அவருக்கு யார் இந்த அதிகாரத்தை தந்தது. எந்த விதியின் கீழ் இதை அவர் மறுக்கிறார் என்ற கேள்விக்கு இன்று வரை பதில் இல்லை. இந்தி மொழி சம்பந்தமாக முதல்வர் பல கேள்விகள் கேட்கிறார். வடமாநிலங்களில் மும்மொழி திட்டத்தில் தமிழ் மொழி எத்தனை மாநிலங்களில் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் உள்ள கேந்திரிய வித்யாவில் தமிழ் ஏன் சொல்லிக் கொடுப்பதில்லை. தமிழ் ஆசிரியர்களே நியமனம் செய்யவில்லையே ஏன். இந்தியை வட மாநிலத்தில் புகுத்துவதற்காக பழமையான 25 மொழிகளை நீங்கள் நீர்த்துப் போக செய்துவிட்டீர்களே என்றெல்லாம் கேள்வி மேல் கேள்வி கேட்கிறார் தளபதி. ஆனால் பாஜகவின் whatsapp மேதைகள் இந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல முடியவில்லை. அதற்கு பதில் பிரச்சனையை திசை திருப்புகிறார்கள். புதிய கல்விக் கொள்கை தாய் மொழிக்கு முக்கியத்துவம் தருகிறது என்ற ஒரு புதிய பொய்யை பாஜக சொல்லி வருகிறது. தமிழகத்தில் திராவிட அரசியல் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த முதலே எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று தாய் மொழியை போற்றி பாதுகாக்கிறது. அரசு கட்டிடங்களிலேயே நாங்கள் தமிழ் வாழ்க என்ற பெயர் பலகை வைத்து நாங்கள் தாய்மொழியை கொண்டாடி வருகிறோம். தாய்மொழி பற்றிய பாடம் உங்களிடம் கற்க வேண்டிய அவசரமோ அவசியமோ எங்களுக்கு இல்லை. இதை பாரதிய ஜனதா தெரிந்து கொள்வது நல்லது.

பாரதிய ஜனதாவின் நிஜ முகம் எது என்பதே நமக்கு தெரியவில்லை எல்லாமே போலியானவையோ என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறது. சமீபத்தில் சென்னைக்கு வந்த மத்திய கல்வி இணை அமைச்சர் சுகந்த மஜும்தார் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியில் மத்திய கல்வி அமைச்சர் பேசிய வீடியோ காட்சி ஒளிபரப்பானது. அதில் மத்திய அமைச்சர் தமிழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும் தொழில் முனைவோர்களும், விஞ்ஞானிகளும் நாட்டை கட்டமைப்பதில் முக்கிய பங்கு வகித்து வருகிறார்கள். தொழில் நிறுவனங் களுக்கான உற்பத்தி துறையில் இந்தியா சிறந்து விளங்குவதற்கும் புதிய தலைமையாக இந்தியா மாறுவதற்கும் தமிழகத்தின் பங்கு பெரிதும் உள்ளது என்று பேசியிருக்கிறார். இதையே அதே மேடையில் பேசிய மத்திய கல்வி இணை அமைச்சரும் வழி மொழிந்திருக்கிறார். நிதி ஆயோக் மத்திய அரசின் திட்டங்களை செயல்படுத்தும் மாநிலங்களில் முதன்மை மாநிலமாக தமிழகம் இருக்கிறது என்று பாராட்டு பத்திரம் வாசிக்கிறது. நிதிநிலை அறிக்கைக்கு முன்னதான பொருளாதார அறிக்கை தாக்கல் செய்த மத்திய நிதியமைச்சர் தமிழகத்தின் காலை உணவு திட்டம் அந்நிய முதலீடு போன்றவை பாராட்டப்பட வேண்டியவை என்று குறிப்பிட்டி ருக்கிறார்.

**ரகுபதி**
சட்ட அமைச்சர்



அவ்வளவு ஏன் தினந்தோறும் வசை பாடும் நமது ஆளுநர் கூட ஒரு நிகழ்ச்சியில் தமிழகம் அனைத்திலும் வளர்ச்சி அடைந்து வரும் மாநிலமாக உள்ளது. இங்கு ஏற்பட்டுள்ள அனைத்து துறைகளின் வளர்ச்சி மற்றும் மாற்றங்களை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று அவரே மெய்மறந்து பாராட்டி இருக்கிறார். அதனால் தான் கேட்கிறேன் பாஜகவின் நிஜ முகம் எது ?

சென்றாண்டு நவம்பர் 18 அன்று சென்னைக்கு வந்த 16வது நிதி குழுவிடம் முதல்வர் வைத்த கோரிக்கைகளை, இந்தப் பாராட்டு பத்திரம் வழங்கிய பாஜகவினருக்கு நினைவு படுத்துகிறேன். அவர் நிதி குழு உறுப்பினர்களிடம் பேசும் போது தமிழ்நாடு சந்தித்து வரும் மூன்று சவால்களை குறிப்பிட்டார். முதலாவது கடந்த சில ஆண்டுகளாக எதிர்கொண்டு வரும் இயற்கை பேரிடர்கள், அவற்றுக்கான நிவாரணப் பணிகள். இரண்டாவதாக தமிழகத்தில் பிள்ளைப்பேறு குறைந்து வருவதால் அதிகரித்து வரும் முதியோரின் எண்ணிக்கை அது தொடர்பான சமூக நல திட்டங்கள். மூன்றாவதாக தமிழகம் வேகமாக நகர் மயமாகி வருகிறது. அது தொடர்பான உள்கட்டமைப்பு செலவினங்கள் இவற்றையெல்லாம் சுட்டிக் காட்டி முதல்வர் பேசும்போது தமிழக அரசு தனது கோரிக்கையில் தமிழகத்தை வேறு எந்த மாநிலத்தையும் ஒப்பிட்டு பார்ப்பதில் உள்ள ஏற்றத்தாழ்வை எடுத்துக் காட்டவில்லை. ஏனெனில் இன்னொரு மாநிலத்திற்கு தரும் நிதிக்கு தான் தடையாக இருக்கக் கூடாது என்று பெருந்தன்மையுடன் அது பற்றி எல்லாம் குறிப்பிடாமல் தமிழகத்துக்கு ஒன்பதாவது நிதிக்குழு பரிந்துரைத்த 8% பங்கீடு படிப்படியாக குறைந்து 4% ஆக குறைந்து விட்டது. ஆகவே 2011க்கு பதிலாக 1971 மக்கள் தொகையை கணக்கில் கொள்ள வேண்டும் என்று தனது தரப்பு நியாயங்களை அவர் எடுத்துச் சொன்னார். கூடவே வரி பகிர்வினை முறைப்படுத்த சமச்சீரான அணுகுமுறை தேவை என்று தளபதி அவர்கள் வலியுறுத்தினார். அவர் தமிழகத்தை எந்த மாநிலத்துடன் ஒப்பிட்டு ஏன் இந்த பாரபட்சம் என்றெல்லாம் கேட்காமல் பெருந்தன்மையாக அதே சமயம் தனது பக்கமுள்ள நியாயத்தை நிதி குழுவிடம் வலியுறுத்தினார். ஆனால் நிதி குழு நிதி ஆயோக் எல்லாமே பாஜகவின் தலையாட்டி பொம்மைகள் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆனால் இது பற்றி எல்லாம் கவலைப்படாமல் மக்கள் நலன் என்பதிலேயே திட்டமிட்டு இன்றைக்கு தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாவது பொருளாதாரம் மாநிலமாக வளர்ந்துள்ளது. தேசிய உள்நாட்டு உற்பத்தியில் 5.4% இருந்து கடந்த நான்கு ஆண்டுகளில் 9.2% என்று உயர்ந்துள்ளது. உள்நாட்டு பொருளாதாரக் கொள்கையில் தமிழகம் வளர்ச்சியை எட்டியுள்ளது. மருத்துவம் கல்வி சமூக நலன் இவற்றை மேம்படுத்த இந்தியாவிலேயே முன்மாதிரி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. தமிழகம் அமைதி மாநிலமாக இருப்பதால் இங்கு பெண்கள் அதிக அளவு பணிபுரிகிறார்கள். இந்தியாவில் 41% பெண்கள் தமிழகத்தில்தான் வேலை செய்கின்றனர். தமிழக வளர்ச்சி திட்டங்களுக்கு தனது சுயமரியாதையை விட்டு விட்டு மத்திய அரசிடம் கையேந்த நமது தளபதி விரும்புவதில்லை. மக்கள் நலனுக்காக அவர் தொடர்ந்து சிந்தித்து வருவதால் தான் தொடர்ந்து மக்கள் அவரை வெற்றிக்கோப்பை தந்த கௌரவிக்கிறார்கள்.

நாம் நிதி கேட்டால் தமிழ் மீது பிரதமருக்கு அக்கறை இருக்கிறது என்கிறார் ஒன்றிய அமைச்சர். திருக்குறள் வணக்கம் என்று யாரோ எழுதிக் கொடுத்ததை பிரதமர் ஒப்பிப்பதை தான் அவருடைய தமிழ் அக்கறை என்கிறார் ஒன்றிய அமைச்சர். ஆனால் சில ஆயிரம் பேர் மட்டும் பேசும் சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கு 1,488 கோடி நிதி ஒதுக்கியது ஒன்றிய அரசு. ஆனால் 8 கோடி மக்கள் பேசும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அவர்கள் ஒதுக்கியது வெறும் 74 கோடி தான். பிரதமரின் தமிழ் அக்கரைக்கு இதைவிட வேறு உதாரணம் தேவை இல்லை.

மகளிர்க்கு மாதம் ஆயிரம் ரூபாய், மகளிர்க்கு இலவச பஸ் பயணம், அரசு பள்ளியில் படித்த கல்லூரி மாணவிகளுக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய், காலை உணவு திட்டம் புதுமைப் பெண்கள் திட்டம், தமிழ் புதல்வன் என்று இப்படி பார்த்து பார்த்து பல திட்டங்களை மக்களுக்காக யோசித்து யோசித்து தீட்டி வருகிறார் தளபதி.

இந்த திட்டங்களை எல்லாம் பாஜக காப்பி அடித்து தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டு தனது ஓட்டு வங்கியை அதிகரித்துக் கொண்டு வெற்றி பெற்ற மாநிலங்களில் அதை செயல்படுத்தவும் செய்கிறது. அதற்கு நன்றி கடனாக கூட தமிழகத்தின் மீது கரிசனம் காட்டலாம் .ஆனால் அந்த நன்றி எல்லாம் மதவாத பாஜகவுக்கு எப்படித் தெரியும்.

துவக்க பள்ளியில் தளபதி அறிவித்த காலை உணவு திட்டத்தை இந்தியாவில் பல மாநிலங்கள் தற்சமயம் அறிமுகம் செய்திருக்கிறது. அவ்வளவு ஏன் கனடா நாட்டில் இந்த திட்டம் பற்றி கேள்விப்பட்டு அங்குள்ள மாணவர்களுக்கு இந்த காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். தற்போது பிரிட்டனிலும் அந்தத் திட்டத்தை செயல்படுத்த தொடங்கி இருக்கிறார்கள். அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை முதல்வரின் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தை போற்றி புகழ்ந்துள்ளது. நமது தளபதி சிந்தையில் பூத்த திட்டங்கள் உலகமெங்கும் பாராட்டப்பட்டு முதல்வருக்கு புகழை சேர்க்கின்றன. உலகம் சுற்றும் வாலிபர் மோடி அங்க எல்லாமே மக்கள் பாராட்டுவதை கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

தொழில்துறையில் கூட சமூக நீதியை அறிமுகப்படுத்தியவர் நமது தளபதி முதல்வர். பட்டியல் சாதி பட்டியல் பழங்குடி மக்கள் தொழில் தொடங்குவதற்கு ஏற்கனவே நடத்தும் தொழிலை விரிவுபடுத்துவதற்கு முதலீடு கிடைக்க ‘அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி’ திட்டத்தை அறிமுகம் செய்தவர் நமது முதல்வர். தொழில் வளர்ச்சியின் ஊடாக சமூக நீதியை வளர்த்தெடுக்கிறது இந்த திட்டம். சமூகத்தில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் சூழ்நிலை இந்த திட்டம் உருவாக்கி இருக்கிறது. இப்படி மக்களுக்காக திட்டங்களை பார்த்து பார்த்து செய்வதால் தான் பாஜக நம்மை வஞ்சிக்க பார்க்கிறது.

நிதி பகிர்வு விவகாரத்தில் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே போட்டி மனப்பான்மை இருக்கக் கூடாது என்று சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கு அறிவுரை வழங்கியது. தமிழகம் உட்பட சில எதிர்க்கட்சி அரசுகள் மாநில அரசுகள் தங்கள் உரிமை பறிக்கப்படுவதாக குரல் எழுப்பிய நிலையில் உச்ச நீதிமன்றம் தனது கவலையை பதிவு செய்தது. ஆனால் எனக்கென்ன மனக்கவலை நான் இதே மாதிரி தொடர்ந்து எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலத்தை அதுவும் குறிப்பாக தமிழகத்தை வஞ்சித்து கொண்டு தான் இருப்போம் என்கிறது பாஜக.

அதே சமயம் பாஜக இன்னொரு விஷயத்தையும் யோசித்துப் பார்ப்பது நல்லது. மத்திய அரசின் பொருளாதார அறிக்கை நிதி ஆயோக் மத்திய அரசின் நிர் யாத் நிறுவனம் எதுவுமே பாஜக ஆளும் மாநிலங்களை பாராட்டவில்லை. காரணம் அந்த மாநிலங்களில் பாராட்டும்படி எதுவுமே நடக்கவில்லை. இந்திய ரிசர்வ் வங்கி கூட தனது வளர்ச்சி குறித்த ஆய்வேட்டில் மனித வளங்களை வளர்ப்பதில் மகாராஷ்டிரா குஜராத் மாநிலத்தை விட தமிழகம் முன்னேற்றம் கொண்டு முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. துணிகள் ஏற்றுமதியிலும் தமிழகம் நாட்டிலேயே முதலிடம் பெற்றுள்ளதாக மத்திய அரசின் நிர்யாத் நிறுவனம் 2022–23 ஆண்டுக்கான ஆய்வறிக்கையில் பாராட்டி இருக்கிறது. எனவே தமிழகத்தின் வளர்ச்சியை மதவாத பா.ஜ.க.வால் தடுக்க முடியாது.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் வடக்கு ஒன்றியம், சோமவாரபட்டி ஊராட்சி பெதப்பம்பட்டி சுப்பா நாயுடு அரசு மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியினை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆகியோர் துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிக்கு பரிசுக் கோப்பையை வழங்கினர். இதில் குடிமங்கலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் அணிக்கடவு ச.கிரி உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.